www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
# Thamil Eelam Liberation Organization

TELO

## மக்களே எமது கரங்களுக்கு வலுவூட்டுங்கள், இனத்துரோகிகளை இனங்காணுங்கள்.

சர்வதேச ரீதியாக உழைக்கும் மக்களை சுரண்டி வாழ்ந்து கொண்டிருக்கும் முதலாளித்துவம் தங்களின் வலிமை மிக்க கொடூர கரங்களின் மூலம், இம் முதலாளித் துவத்திற்கு எதிராக எழுச்சி பெற்று போராடும் மக்களை நசுக்கி அடக்கி ஒடுக்கி பலயீனப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள்.

இந் நிலைமையை தமிழீழ போராட்டத்தில் நிசர்சன மாக காணக்கூடியதாக இருக்கிறது. சிங்கள இனவெறி பிடித்த அரசாங்கத்திற்கும், அதற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் தக்க பதிலடியைக் கொடுத்து இச் சர்வதேச பயங்கரவாதி களின் அடக்கு முறையில் இருந்து மீளப் போராடிக் கொண்டிருக்கும் தமிழீழ மக்களின் போராட்டத்தை சில தீய சக்திகள் தங்களின் சொந்த காரணிகளுக்காகவும், தீர்க சிந்தனையற்ற செயலின்மையாலும், விடுதலை பற்றி தெளிவான கண்ணோட்டமும், சிந்தனையும், விடுதலை யில் நாட்டமும், மற்ற தன்மையாலும் தமிழீழ போராட் டத்தை இழந்த இறைமையை மீட்கும் போராட்டத்தை, இன ஒழிப்புக்கு எதிரான போராட்டத்தை திசை திருப்ப முனைந்து செயல்பட்டு வருகின்றன.

இத் தீய சக்திகளின் திசைமாற்ற செய்கையினால், சிறிலங்கா இனவெறி அரசின் இனவொழிப்புத் திட்டத் திற்கு மேலும் ஆதரவையும், சந்தர்ப்பத்தையும் அளித் துள்ளதேயொழிய வேறொன்றும் இல்லை.

தமிழீழ மக்களின் இன ஒழிப்புக்கு எதிரான போராட்டத்தில், பங்கு கொண்டிருக்கும் விடுதலை இயக் கங்களின் நிதானமான தீர்க்க சிந்தனையும் மிக்க தலைவர் சிறிசபாரெத்தினத்தின் வழி காட்டலின்கீழ் இயங்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ) ஆனது அனைத்து தமிழ் மக்களன் ஏகோபித்த ஆதரவையும், சர்வதேச முற்போக்குச் சக்திகளின் ஆதரவையும் கொண் டிருக்கின்றது.

எமது இயக்கத்தின் இப் பாரிய வளர்ச்சியைக் கண்டு சகிக்காத முற்போக்கு சிந்தனையற்ற, விடுதலையில் நாட்டமற்ற தனிநபர் தலைமைத்துவம் பேனும் விடு தலைப்புலிகள் (LTTE) என்று கூறிக்கொள்ளும் ஆயுதம் தாங்கிய தீய கோஷ்டி, தமிழீழப் போராட்டத்தை விரைவுபடுத்த தனித் தனியாக செயல்பட்டு வந்த விடு தலை இயக்கங்களை ஒன்றுபடுத்தி ஈழத் தேசிய விடுதலை முன்னணி ( ENLF ) என்னும் கூட்டமைப்பு உருவாக்க முன்னின்று உழைத்த எமது இயக்கத்தை சிதைவுபடுத்தி விடுதலையை பின்தள்ளும் முயற்சியில் இறங்கி உள்ளது.

விடுதலையை பின்தள்ளும் விடுதலையில் நாட்டமற்ற இக் கோஷ்டியினால் எமது இயக்கத்தின் மேல் நடத்தப் பட்ட அராஜகத்தின் விளைவு, இனவெறி அரசுக்கெதி ராக கிளர்ந்தெழுந்த விடுதலை வெறிகொண்ட பல போராளிகள் நீசத்தனமாக படுகொலை செய்யப்பட் டனர்.

இச் சம்பவத்தின் உண்மை நிலையானது. தமிழீழப் போராட்டத்தில் முன்னணி வகித்துக் கொண்டிருக்கும் தகுதிமிக்க தலைமைகளை அழித்து தனது தலைமையைப் பேனும் நோக்கில் செயற்பட்டுவரும் விடுதலைப்புலிகள் (LTTE) கோஷ்டி தலைவர் பிரபாகரன், எமது இயக்கத் தலைவரையும், இயக்கத்தையும் அழிக்க பல சதிமுயற்சி களை மேற்கொண்டதை மக்கள் அறிந்ததே. இச் சதி முயற்சிகள் எமது இயக்கத்தினரால் அவ் அவ் காலகட் டத்தில் முறியடிக்கப்பட்டதன் விளைவால் மறைமுக சதிகள் பயன்படாது என்ற நிலையை உணர்ந்து நேரடி யாக எமது தலைவர் தமிழீழப் பிரதேசத்தில் போராட்ட முனைகளைத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கும் வேளை யில் தமிழீழப் பிரதேசத்திலேயே பல வருடங்களாக காலடி வைக்காத பிரபாகரன் எமது தலைவரை அழிக் கும் உத்தரவை தனது வெறிபிடித்த கூட்டத்தினருக்கு பிறப்பித்துள்ளார்.

எமது தலைவரை அழிப்பதற்கான சதித் திட்ட மானது பலமாதங்களாக திட்டமிடப்பட்டுள்ளதாக ஊர்ஜிதமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பல மாதங்களாக நடைபெற்ற ஈழத் தேசிய விடுதலை முன்னணி (TELO, EROS, EPRLF, LTTE யின் கூட்டமைப்பு) கூட்டங்களுக்கு அழைப்பு பல தடவை விடுத்திருந்தும் தொடர்ச்சியாக இக்கூட்டங் களில் பங்கு பற்றாது புறக்கணித்தமை இவர்களின் சதித் திட்டத்தின் ஒரு அங்கமே.

இக்காலகட்டத்தில் பல கொள்ளைகளை LTTE யினர் செங்கொரில்லாக்கல் என்ற பெயரில் நடாத்தி யுள்ளமை எமது இயக்கத்திற்கெதிரான சதித்திட்டத்தின் ஒரு செயல்பாடு என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சதித் திட்டத்தை செயல்படுத்தும் காரணி எடுக் கும் முகமாக எமது போராளிகள் நால்வரை 29.04.86 அன்று காலை 9.00 மணியளவில் கைது செய்து, பயங் கர சித்திரவதையின் பின் இருவரை அன்று காலை 11.00 மணியளவில் விடுதலை செய்தனர். இதன் விளைவாக எமது போராளிகள் மதியம் 5.00 மணியளவில் விட் கோஷ்டியில் இருவரை கைது செய்தனர். கைது செய்யப் பட்ட ஒரு மணிநேர இடைவெளியிலேயே LTTE அராஜக வாதிகளால் எமது தலைமையகத்தை சுற்றியுள்ள சில முகாம்கள் ராக்கெட், மற்றும் நவீனகர இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் பல நூற்றுக்கணக்கானவர்களால் திட்டமிடப்பட்டபடி சுற்றி வளைக்கப்பட்டது.

இம் முற்றுகையானது எம்மால் கைது செய்யப்பட்ட LTTE யினர் இருவருக்காகத்தான் நடாத்தப்பட்டது என்று LTTE யினர் பிதற்றிக் கொண்டிருப்பதை நோக்கும்போது மக்களை முட்டாளாக்கும் தன்மையை வெளிக் காண லாம். ஏனெனில் ஒரு மணிநேரத்தில் இப்பாரிய முற்று கையை உடனடியாக செயல்படுத்த முடியாது என்பதை சாதாரணமானவர்கள்கூட புரிந்து கொள்வார்கள்.

எமது பாசையூர் முகாமிற்குச் சென்ற LTTE யினர் எம்மோடு சமரச பேச்சு வார்த்தை நடாத்தும் நோக்கில் எம்மோடு அளவலாவி உள் நுழைந்தவர்கள் திடீரென எதிர்பாராத துப்பாக்கிப் பிரயோகம் செய்து எமது போராளிகளின் தாக்குதலை முறியடித்து பல போராளி களின் உயிர் இழப்புக்கு மத்தியில் தமது திட்டத்தை நிறைவேற்றினர்.

வட்டுக்கோட்டை, அளவெட்டி மேற்குறிப்பிட்ட முகாம்களில் எமது இயக்க வீரர்கள் உடற்பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த வேளையில் இக்கோஷ்டி (LTTE தாக்குதலை மேற்கொண்டது இவ் எதிர்பாராத தாக்கு தலை எமது வீரமிக்க போராளிகள் தீரத்துடன் சமாளித் துவம், எம்மில் பல உயிர் சேதங்கள் ஏற்பட்டது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடிகாமம் முகாம் தாக்குதலின்போது LTTE வஞ் சகக் கும்பல் நேச சக்திகளாக எமது முகாமிற்குள் ஊடுருவி எமது தோழர்கள் உணவு அருந்தும் வேளையில் திடீரென எதிர்பாராத நயவஞ்சக தாக்குதலை மேற் கொண்டமையால் செயலிழந்த எமது போராளிகள் பலரும் உயிர் நீத்ததுடன் முகாமையும் சின்னா பின்னப் படுத்தினர்.

அவர்களின் முக்கிய இலக்கான எமது தலைவரை அழிக்கும் நோக்கத்தை செயல்படுத்த எமது தலைமை முகாமான கல்வியங்கோட்டை சுற்றி வளைத்தனர். அவர் களின் முற்றுகை இப்பகுதி வாழ் மக்களும், எமது போராளிகளும் தடுத்து நிறுத்தியதில் இக்கோஷ்டியின் (LTTE) தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் இடம்பெற்றது.

இதனால் மிகவும் வெறிகொண்ட விட்யினரின் ஒரு பகுதியினர் எதும் செய்யப்பாதையற்ற எமது ஆதர வாளர்களையும், அப்பாவிப் பொதுமக்களையும், வயோதிபர்கள், பெண்கள், குழந்தைகள் என்றும் பாராது வெட்டியும், சுட்டும் கொன்று குவித்தார்கள், குறிப்பாக திருநெல்வேலி சந்தியில் பல குற்றுயிரான பொது மக்களின் பிணங்களை டயர்போட்டு எரித்து நரசவெறியாட்டம் ஆடிக் கொண்டிருக்கின்றனர்.

மறு பகுதியினர் எமது போராளிகளும், ஆதரவாளர் களும வீடுகளை சொத்துக்களையும் கொள்ளையடித்து குண்டு வைத்தும் தகர்த்துள்ளனர்.

இதேவேளை தமது பிரச்சார சாதனங்கள் மூலம் எமது தலைவரும், தமிழீழ மக்களின் நம்பிக்கை ஒளியு மான சிறிசபாரெத்தினம் கைது செய்யப்பட்டதாக தமிழீழத்திலும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பிரச்சாரத்தை மேற்கொள்ளுவதன் மூலம் எமது ஆதர வாளர்களையும், பொது மக்களையும் குழப்பத்திற்குள் ளாக்க முனைந்து செயற்படுகின்றனர்.

தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில் கொள்ளை போன்ற பிரசித்தி பெற்ற ஆலயங்களில் கொள்ளைகளை மேற்கொண்ட விட் இயக்கத்தினரை நல்லூர் கோவில் கொள்ளை முயற்சியின்போது டெலோ போராளிகளால் மக்களுக்கு இனங்காட்டி விரட்டியடிக்கப்பட்டு மக்களின் சொத்துக்களுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும், பாது காப்பளித்த எம்மை, கடந்த மாதங்களில் ரத்தவெறி பிடித்த புலிகளால் திட்டமிடப்பட்டு, மேற்கொள்ளப் பட்ட கொள்ளைகளில், கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களையும், இவர்களால் கடத்தப்பட்ட வாகனங் களையும் சந்தர்ப்ப சூழ்ச்சிகளால் கைப்பற்றப்பட்ட எமது முகாம்களுக்குள் வைத்து அவைகளை மக்களுக்கு மீள அளித்து எம்மை மக்கள் மத்தியில் கொள்ளைக்காரர் களாகச் சித்தரிப்பதன் மூலம் தமது கடந்த கொள்ளை களை எல்லாம் மூடி மறைத்து தப்பிக்கப் பார்க்கின்றார் கள்.

''உண்மைக்கு மேடையோ – அன்றி
வெளிச்சமோ போட்டுக்காட்டவேண்டிய
தேவையில்லை''

—தமிழீழ தேசபிதா, தங்கதுரை.

எமது கடந்த கால செயல்பாடுகளையும், விடுதலை யில் தீர்க்கமான சிந்தனையும் கொண்ட, எமது இயக் கத்தை தெளிவுற உணர்ந்து கொண்டுள்ள மக்கள் இச் சதிக் கும்பலின் சதி வளையில் வீழ்ந்து விடமாட்டார்கள், என்பதில் நாம் பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இன்றைய இத் தனிநபர் கோஷ்டியின் நரபலி வேட்டை யாடும் சகாசங்கள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. கடந்த காலங்களில் இவர்களின் தலைவர் பிரபாகரனால் தன் னுடைய தனித் தலைமையை காப்பாற்ற தீரம் மிக்க பல முன்னணி போராளிகளை கொலை செய்த கொலைப் பட்டியலை சுட்டிக் காட்டுவோமானால் அது நீண்டு கொண்டே போகும். அவற்றில் சில,

* மைக்கல் செல்வம் கொலை
* சுந்தரம் கொலை
* இந்தியாவில். சென்னையில் பாண்டிபஜாரில் பிளாட் தலைவரை உமாமகேஸ்வரனை கொல்லும் முயற்சி
* டெலோ இயக்கத் தலைவர் தேவன் கொலை
* மனோ மாஸ்டர் கொலை
* டெலி இயக்கத் தலைவர் ஜெகன் கொலை (பேச்சுவார்த்தைக்கு அழைத்துக் கொலை செய்யப் பட்டார்)
* முன்னால் போப்பாய், உடுவில் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் கொலை, EPRLF வவுனியா பொறுப்பாளர் றீகன் போராளி அமின் மற்றும் 9 போராளிகள் கொலை.

இன்னும் பல கொலைச் சம்பவங்கள்,

இப்படியான பல கொலைகளை நடாத்தி தனது தலைமையை காப்பதில் கண்ணும் கருத்து மாக இருந்து செயல்பட்டு வரும் இத் தனிநபர் கோஷ்டியினரை பற்றி சிந்திக்கும்போது மக்களின் விடுதலையில் நாட்டமற்றவர்கள் என்பது தெட்டத் தெளிவாகிறது.

இனவெறி அரசின் நெருக்கடி ஒருபக்கம் இத் தனிநபர் கோஷ்டியின் நெருக்கடி இன்னொரு பக்கம் மக்களுக்கு கஷ்டத்தையும், துயரத்தையும் விளைவித்துக் கொண்டிருப்பதால் மக்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளதை நாம் அறிவோம்.

''மத்தளத்தைப் போல'' இருபக்க அடியை தாங்க எவ்வளவு நாள்தான் மக்களால் முடியும். மக்களிடையே இந்நிலைமையின் தாக்கம் உணர்த்து வதுதான் என்ன?

முதலில் தமிழீழப் போராட்டமா? அல்லது களை ஒழிக்கும் போராட்டமா?

''எமது விடுதலையை நாடிப் போய்க்கொண் டிருக்கும் பாதையில் இப்படியான தடைகள் ஏற் படுவது இயல்பே ஒவ்வொரு தடைகளையும் அகற்றி எமது பாதையில் முன்னேறுவதே இலக்கை அடைவதற்கு வழி வகுக்குமேயன்றி தடைகளை கண்டு சோர்ந்து நிற்பதால் அல்ல.''

இன்றையக் காலம்வரை எமது இயக்கமானது பல சோதனைகளையும், வேதனைகளையும் அனு பவித்தும், அவைகளை சாதனைகளாக்கி முன் னேற்றப்பாதையில் நாம் நடந்து வருகின்றோம். இன்றும் மக்களின் ஆதரவும், அன்பும் எம் பக்க மிருப்பதாலும், எமது தலைவர் சிறிசபாரெத்தினத் தின் தீர்க்கமான தெளிவான சிந்தனையாலும், உறுதிமிக்க எமது போராளிகளாலும், இச் சோதனைகளையும் வேதனைகளையும் சாதனை களாக்குவோம்!!

விடுதலைப் பாதையில் வீறுநடைபோடு வோம்!

சுதந்திர தமிழீழம் அமைப்போம்!

இது உறுதி!

விடுதலை உணர்வு மிக்க மக்களே! நீங்கள் தமிழினத் துரோகிகளை இனங்கண்டு விடுதலைப் பாதையில் இருந்து அகற்றுவதற்கு எமது கரங் களுக்கு வலுவூட்டுங்கள்.

01.05.1986

அரசியல் பிரிவு,
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

பிரச்சார வெளியீட்டு பிரிவால் வெளியிடப்பட்டது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்